CASE NO : ID 42/2025

NAME : WW1 – K. செல்லமுத்து

DATE : 24.02.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி,

கடந்த 25.06.2015 முதல் 31.07.2015 வரை 37 நாட்கள் எந்த வித முன்னறிவிப்போ அல்லது விடுப்பு விண்ணப்பமோ அளிக்காமல் வேண்டுமென்றே தன்னிச்சையாக விடுப்பு எடுத்ததால் தான் இந்த உத்தரவு வழங்கி நிலையாணைகள் சட்டத்தின் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சுங்கம்-1 கிளையில் பணிப்புரிந்து வந்த போது தான் என்னை பொள்ளாச்சி-1 கிளைக்கு மாற்றம் செய்தார்கள். ஆனால் பணியில் இருந்து விடுவிக்கும் ஆணையை பிறப்பிக்காமலும் வேண்டுமென்றே காலதாமதம் செய்து உத்தரவு வழங்கப்பட்டதால் என்னால் பணிக்கு செல்ல முடியவில்லை. நான் பணிக்கு செல்ல தயாராக தான் இருந்தேன். எதிர்மனுதாரர் வேண்டுமென்றே பணியிலிருந்து விடுவிக்கும் ஆணையை காலதாமதம் செய்து அளித்ததால் தான் என்னால் பொள்ளாச்சி சென்று பணியில் சேர முடியவில்லை. நான் இன்னமும் பொள்ளாச்சி 1 கிளைக்கு பணிக்கு வந்த போதும் பணியில் இருந்து விடுவிக்கும் உத்தரவு என்னிடம் இல்லாததால் வேண்டுமென்றே எனக்கு absent போடப்பட்டுள்ளது. நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய குடும்ப

சூழ்நிலை காரணமாக தான் பணிக்கு செல்ல முடியவில்லை. பணியிடமாற்ற உத்தரவை தாக்கல் செய்யலாமா என்றால் அதனை என்னிடம் இருந்து எதிர்மனுதாரர்கள் பெற்று கொண்டு விட்டார்கள். ஆனால் எனக்கு கடந்த 06.06.2015லே பொள்ளாச்சி கிளை 1 ல் பணியில் சேர சொல்லி உத்தரவு வந்துள்ளது என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே பணியிட மாற்ற உத்தரவு பெற்று கொண்டு பணிக்கு சேராமல் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. போக்குவரத்து துறை பொது சேவையை செய்து வருகிறது என்றால் சரிதான். நான் ஓட்டுநர் பணியில் வேலை செய்தால் மட்டுமே பேருந்துகளை இயக்கி எதிர்மனுதாரர் நிறுவனத்தை நடத்த முடியும் என்றால் சரிதான். எனவே இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.